முழுப் பதிப்புரிமையுடையது/ All Rights Reserved

கல்வி பொது தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2019
General Certificate of Education (Adv. Level) Examination, December 2019

தரம் 12 **விடியல் கல்வியகம்**

கணக்கீடு I Accounting I	33 T I	ஒரு மணித்தியாலம் One hours

சுட்டெண்: .....

அறிவுறுத்தல்கள்:
- **1-15** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- 16-25 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- ஒவ்வொரு வினாவுக்கும் **நான்கு** புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினாத்தாள் I இற்கான	
வினா இல :	புள்ளிகள்
01-15	
16-25	
மொத்தம்	

1. நிறுவனமொன்றின் நிதிக்கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?
   1) தீர்மானம் எடுப்பதற்காக முகாமையாளர்களுக்குத் தகவல்களை வழங்குல்.
   2) வருமானத்தின் மீது வரிகளை விதிப்பதற்காக அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்குதல்.
   3) நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர்களுக்குத் தகவல்களை வழங்குதல்.
   4) நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கிச் செல்கின்றனவா என்பதனை அவதானிப்பதற்காகத் தகவல்களை வழங்குதல்.
   5) நிறுவனத்தின் மீது அக்கறையுடைய வெளிவாரி அக்கறையுடையோர் தீர்மானங்களை எடுப்பதற்குத் தகவல்களை வழங்குதல்.

2. றீகன் என்பவர் தனது வியாபாரத்தினால் பெறப்பட்ட கடனுக்கான மாதாந்த தவணைக் கொடுப்பனவான ரூ.100 000 ஐ தனது சொந்தப் பணத்திலிருந்து செலுத்தியுள்ளார். தவணைக் கொடுப்பனவுக்குள் உள்ளடங்கியுள்ள வட்டி ரூ.25 000 ஆகும்.
   பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது இக்கொடுக்கல் வாங்கல்களின் தேறிய விளைவினைக் காட்டுகின்றது? (நிதிக் கூற்றுக்கள் மாதாந்தம் தயாரிக்கப்படுகின்றன எனக் கருதுக.)

சொத்துக்கள்	பொறுப்புக்கள்	உரிமையாண்மை
1) 0	-75000	+75000
2) 0	-100 000	+100 000
3) +75000	0	+75000
4) -100 000	-100 000	0
5) -100 000	-75000	-25000

- 3,4,5 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

குமரன் என்பவர் ரூ.100 000 பட்டியல் விலை கொண்ட பொருட்களை 10% வியாபாரக் கழிவினை அனுமதித்ததன் பின்னர் அழகன் என்வருக்கு 10.03.2019 இல் கடனுக்கு விற்பனை செய்துள்ளார். இப்பொருட்களின் கிரயமானது ரூ.60 000 ஆக இருந்தது. ரூ.30 000 விற்பனைப் பெறுமதியுடைய பொருட்கள் (கிரயம் ரூ.20 000) ஆனவை 15.03.2019இல் அழகனால் திருப்பி அனுப்பப்பட்டன. அழகன் தான் செலுத்த வேண்டிய மீதியினை 31.03.2019இல் 5% காசுக் கழிவினைப் பெற்ற பின்னர் கொடுத்துத் தீர்த்துள்ளார்.

3. குமரன் வியாபாரத்தில் இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்திய மூல ஆவணங்களின் ஒழுங்கு வரிசை
   1) விலைப்பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   2) விலைப்பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
   3) விலைப்பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு
   4) விலைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு
   5) விலைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு

4. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக குமரன் வியாபாரத்தின் 31.03.2019இல் முடிவடைந்த வருடத்துக்கான தேறிய இலாபத்தில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு
   1) ரூ.6500
   2) ரூ.7000
   3) ரூ.17000
   4) ரூ.20000
   5) ரூ.26500

5. அழகன் வியாபாரத்தில் இக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்திய மூலப் பதிவேடுகளில் ஒழுங்கு வரிசை
   1) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
   2) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
   3) கொள்வனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, காசுக் கொடுப்பனவுகள் நாளேடு
   4) கொள்வனவு நாளேடு, கொள்வனவுத் திரும்பல் நாளேடு, பொது நாளேடு
   5) கொள்வனவு நாளேடு, பொது நாளேடு, பொது நாளேடு

- **6ம், 7ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

வியாபாரமொன்று தனது எல்லாக் காசு கொடக்கல் வாங்கல்களையும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்கிறது.

2019 மார்ச் மாதத்துக்கான கணக்குப் புத்தகங்களின்படி காசு கொடுக்கல்வாங்கல்களின் சுருக்கம்:

விபரம்	**ரூ'000**
01.03.2019இல் காசு மீதி	100
31.03.2019இல் காசுப் பெறுவனவுகள் நாளேட்டின் மொத்தத் தொகை	1200
31.03.2019இல் காசுப் கொடுப்பனவுகள் நாளேட்டின் மொத்தத் தொகை	900

04.04.2019இல் பெறப்பட்ட 2019 மார்ச் மாதத்திற்கான வங்கிக்கூற்றின் சுருக்கம்:

விபரம்	**ரூ'000**
01.03.2019இல் மீதி	100
வசூலிக்கப்பட்ட காசோலைகள்	1000
செலுத்தப்பட்ட காசோலைகள்	750
நேரடியாக செலவு வைக்கப்பட்ட நிலையான வைப்பு வட்டி	200
நிலையியற் கட்டளைகளுக்கான கொடுப்பனவுகள்	50

நிலையான வைப்பு வட்டி மற்றும் நிலையியற் கட்டளைக் கொடுப்பனவுகளானவை வங்கிக்கூற்றினைப் பெற்றதன் பின்னரே புத்தகங்களில் பதியப்படுகின்றன.
01.03.2019இல் வசூலிக்கப்படாத அல்லது சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் எதுவும் காணப்படவில்லை.

6. இவ்வியாபாரத்தின் 31.03.2019இல் காசுக் கணக்கின் சீராக்கிய மீதி யாது?
   1) ரூ.300 000
   2) ரூ.350 000
   3) ரூ.400 000
   4) ரூ.500 000
   5) ரூ.550 000

7. இவ்வியாபாரத்தின் 2019 மார்ச் மாதத்துக்கான காசுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எவை சரியானவை?

A. 2019 மார்ச் மாதத்துக்கான காசுக் பெறுவனவுகளின் மொத்தம் ரூ.1400 000 ஆகும்.
B. 2019 மார்ச் மாதத்துக்கான காசுக் கொடுப்பனவுகளின் மொத்தம் ரூ.950 000 ஆகும்.
C. 31.03.2019இல் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ.200 000 ஆகும்.
D. 31.03.2019இல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ.150 000 ஆகும்.

1) A,B மாத்திரம்
2) A,C மாத்திரம்
3) B,D மாத்திரம்
4) C,D மாத்திரம்
5) A,B,C,D ஆகியன எல்லாம்

8. கணக்கீட்டுப் பதிவுகளை முறையாகப் பராமரிக்காத நிறுவனமொன்றின் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

விபரம்	31.03.2019இல் (ரூ'000)	31.03.2018இல் (ரூ'000)
மூலதனம்	650	500
நிறுத்தி வைத்த வருவாய்	325	250

உரிமையாளர் வருடாந்தம் தனிப்பட்ட தேவைக்காக வியாபாரத்திலிருந்து ரூ.50000இனைப் பற்றுகிறார். இத்தொகையானது வியாபாரத்தினால் பராமரிக்கப்படும் ஒரேயொரு ஒதுக்கமான நிறுத்திவைத்த வருவாய்களில் வரவு வைக்கப்படுகிறது.
31.032019இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் மற்றும் 31.03.2017இலுள்ள தேறிய சொத்துக்கள் எவை?

வருடத்துக்கான இலாபம் (ரூ'000)	தேறிய சொத்தக்கள் (ரூ'000)
1) 25	925
2) 75	975
3) 75	875
4) 125	875
5) 125	975

- 9,10,11 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிமலன் வியாபாரத்தில் இடம்பெற்றுள்ளன.

- 01.03.2019 - உபேந்திரனிடமிருந்து கடனுக்கு ரூ.150 000 கிரயமான சரக்குகள் கொள்வனவு
- 05.03.2019 - உபேந்திரனுக்கு ரூ.30 000 கிரயமுடைய சரக்குகள் திருப்பி அனுப்புதல்
- 20.03.2019 - ரூ.100 000 கிரயமுடைய சரக்குகள் ரூ.160 000இற்கு கடனுக்கு விற்பனை
- 20.03.2019 - ரூ.100 000 ஆன விற்பனைத் தரகுக் கொடுப்பனவு
- 02.04.2019 - உபேந்திரனுக்குச் செலுத்த வேண்டிய முழுத்தொகையைக் கொடுத்துத் தீர்த்தல்

9. 31.03.2019இல் உள்ளவாறான நிமலன் வியாபாரத்தில் மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் தேறிய தாக்கத்தினைக் காட்டும் கணக்கீட்டுச் சமன்பாடு:

சொத்துக்கள்	**பொறுப்புக்கள்**	**உரிமையாண்மை**
1) +50 000	-	+50 000
2) +60 000	-	+60 000
3) +170 000	+120 000	+50 000
4) +170 000	+150 000	+20 000
5) +180 000	+120 000	+60 000

10. மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக 31.03.2019ல் உள்ளவாறான நிமலனின் வியாபாரத்தில் கடன்கொடுத்தோர் கட்டுபாட்டுக் கணக்கு மற்றும் கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கு ஆகியவற்றின் மீதிகளில் ஏற்படும் அதிகரிப்பு.

	கடன்கொடுத்தோர் கட்டுபாட்டுக் கணக்கு (ரூ)	கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கு (ரூ)
1)	20 000	150 000
2)	20 000	160 000
3)	120 000	150 000
4)	120 000	160 000
5)	150 000	160 000

11. உபேந்திரனுடனான கொடுக்கல் வாங்கல்களை அவை இடம்டிபற்றதன்படி நிமலனின் வியாபாரத்தின் புத்தகங்களில் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களின் ஒழுங்குவரிசை:
    1) விலைப்பட்டியல், செலவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
    2) விலைப்பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
    3) விலைப்பட்டியல், வரவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
    4) விலைப்பட்டியல், செலவுத்தாள், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு
    5) விலைப்பட்டியல், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு

12. பின்வரும் கூற்றுக்களுள் பொதுப்பேரேடு தொடர்பில் எது/எவை சரியானது/சரியானவை?
    A. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கலானது ஆரம்பத்தில் பொதுப் பேரேட்டில் பதியப்படுகிறது.
    B. இரட்டைப்பதிவு முறை அடிப்படையில் நிறுவனமொன்றினால் பராமரிக்கப்படும் எல்லாக் கணக்குகளினதும் தொகுப்பு பொதுப் பேரேடாகும்.
    C. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்கள் மூலப் பதிவேடுகளில் பதியப்பட்ட பின்னர் பொதுப் பேரேட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.
    D. நிறுவனமொன்றின் பொதுப் பேரேட்டில் காணப்படும் எல்லாக் பணக்குகளுக்கும் கணக்கீட்டுக் கால முடிவில் மூடும்பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
    1) A மாத்திரம்
    2) B,C மாத்திரம்
    3) A,B,C மாத்திரம்
    4) B,C,D மாத்திரம்
    5) A,B,C,D ஆகியன எல்லாம்

13. வணிகமொன்றினால் நிதியாண்டொன்றில் உழைத்த இலாபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமன்பாடு
    1) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் - வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
    2) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் - அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் - வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
    3) வருட முடிவில் உரிமையாண்மை - பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் - வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
    4) வருட முடிவில் உரிமையாண்மை - பற்றுக்கள் - அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் - வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை
    5) வருட முடிவில் உரிமையாண்மை + பற்றுக்கள் + அறிமுகப்படுத்திய புதிய மூலதனம் + வருடத் தொடக்கத்தில் உரிமையாண்மை

- 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயனபடுத்துக.

நிறுவனமொன்றின் பொதுப் பேரேட்டில் காணப்படும் 31.03.2019 இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியானது ரூ.500 000ஆக இருந்தது. எனினும் இம்மீதியானது அத்தினத்திலுள்ள கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தத்துடன் இணங்கவில்லை. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பின்வருவன வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன.

I. 2019 மார்ச் மாதத்தில் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட ரூ.180 000 காசோலைகளானது காசுப் பெறுவனவு நாளேட்டிலும் கடன்பட்டோர் பேரேட்டில் உள்ள அது தொடர்பான கணக்குகளிலும் மாத்திரம் பதியப்பட்டுள்ளது. எனினும் இது பொதுப் பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.

II. ரூ.520 000 கடன் விற்பனையானது ரூ.250 000 ஆக விற்பனை நாளேட்டில் பதியப்பட்டுள்ளது. எனினும் இது கடன்பட்டோர் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டிருந்தது.

III. பதிவழிக்கப்பட்ட ரூ.50 000 அறவிடமுடியாக் கடனானது பொதுப் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டுள்ளது. எனினும் இது கடன்பட்டோர் பேரேட்டில் காணப்படும் அது தொடர்பான கடன்பட்டோர் கணக்கில் பதியப்படவில்லை.

IV. கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து மீதிகளைப் பிரித்தெடுக்கும் போது ரூ.80 000 மீதியொன்று விடுபட்டிருந்தது.

14. மேற்குறிப்பிட்ட வழுக்களைச் சரிசெய்வதற்கு முன்னர் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் மொத்தம்:
    1) ரூ.440 000
    2) ரூ.470 000
    3) ரூ.560 000
    4) ரூ.590 000
    5) ரூ.620 000

15. 31.03.2019இல் உள்ளவாறான கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கின் சரியான மீதி:
    1) ரூ.440 000
    2) ரூ.470 000
    3) ரூ.560 000
    4) ரூ.590 000
    5) ரூ.620 000

- **16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

16. வியாபாரமொன்றின் பின்வரும் அக்கறையுடையோரினால் எத்தகையோர் கீழே தரப்பட்டுள்ள தகவலில் அதிகூடிய அக்கறையுடையவர்களாக இருப்பர்?

    1) அரசாங்கம் 2) முதலீட்டாளர்கள் 3) கடனை வழங்குவோர் 4) முகாமையாளர்கள்

தகவல்	**அக்கறையுடையோர்**
A. நீண்ட தவணைக்கடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிறுவனத்தின் இயலுமை	: .....
B. முதலிட்ட மூலதனத்துடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் இலாபத் தன்மை	: .....
C. நிறுவனமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கான கிரயம்	: .....
D. நிறுவனமொன்று செலுத்தும் வரியின் அளவு	: .....

- **17,18,19 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பின்வரும் தகவல்களைப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜெராட் நிறுவனத்தின் 2019 மார்ச் மாதத்தில் இடம்பெற்றுள்ளன. இந்நிறுவன கணக்கீட்டு வருடமானது 31 மார்ச் மாதத்தில் முடிவடைகிறது.

1) உரிமையாளர் கொண்டுவந்த மூலதனம் ரூ.500 000
2) ரூ.1000 000 சரக்குகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.
3) இருப்பு அழிவு நட்டம் ரூ.50 000
4) ரூ.60 000 விளம்பரச் செலவுகள் ஏற்பட்டுள்ளதுடன் அவை மே மாதம் 2018இல் செலுத்தக்கூடியனவாகும்.

17. பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்று மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைக் குறிக்கின்றது

விளைவு	**கொடுக்கல் வாங்கல் (இலக்கத்தைக் குறிப்பிடுக)**
A. சொத்துக்களில் குறைவும் உரிமையாண்மையில் குறைவும்	: .....
B. பொறுப்புக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் குறைவும்	: .....
C. சொத்துக்களில் அதிகரிப்பும் உரிமையாண்மையில் அதிகரிப்பும்	: .....
D. சொத்துக்களில் அதிகரிப்பும் பொறுப்புக்களில் அதிகரிப்பும்	: .....

18. மேற்படி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதியப் பயன்படும் மூலப் பதிவேடுகளைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	**மூலப் பதிவேடு**
1)	.....
2)	.....
3)	.....
4)	.....

19. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பொதுப் பேரேட்டில் எந்தக் கணக்கு வகையின் கீழ் பதியப்படும் என்பதனை " √ " குறியீட்டின் மூலம் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	**சொத்து**	**பொறுப்பு**	**உரிமையாண்மை**	**வருமானம்**	**செலவுகள்**
1)					
2)					
3)					
4)					

20. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்படும் ரூலப் பதிவேடுகளைக் குறிப்பிடுக.

கொடுக்கல் வாங்கல்	**மூலப் பதிவேடுகள்**
1) கடனடிப்படையில் பொருட்களை விற்பனை செய்தல்:	.....
2) கடன்பட்டோரிடமிருந்து காசோலை ஒன்றைப் பெறுதல்:	.....
3) கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசோலையொன்றை மறுத்தல்	.....
4) கடன்பட்டோர் மீதியொன்றை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்தல்	.....

21. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குப் பொது பேரேட்டில் காணப்படும் கணக்குகளைக் குறிப்பிடுக

கொடுக்கல் வாங்கல்	**வரவு**	**செலவு**
1) கடனடிப்படையில் பொருட்களை விற்பனை செய்தல்		
2) கடன்பட்டோர் மீதியொன்றை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழித்தல்		

22. பொதுப் பேரேட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகளுக்குப் பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக.

கணக்கு **வகைப்படுத்தல்**

1) பெறுமானத்தேய்வு : .....
2) மீள்மதிப்பு ஒதுக்கம் : .....
3) வியாபாரக் கொடுக்குமதிகள் : .....
4) பெற்ற கழிவு : .....

23. வியாபாரமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தேறிய தாக்கத்தினை (+ அல்லது – உடன் கூடிய பெறுமதிகள்) கணக்கீட்டுச் சமன்பாடு எவ்வாறு காட்டுகிறது என்பதனைக் குறிப்பிடுக.

ரூ'000

கொடுக்கல் வாங்கல்	**சொத்துக்கள்**	**பொறுப்புக்கள்**	**உரிமையாண்மை**
1) ரூ.150 000 இற்கு கடனுக்கு வாங்கிய பொருட்கள்			
2) ரூ.90 000 கிரயமான பொருட்களை ரூ.140 000இற்கு காசுக்கு விற்றல்			

24. 2019 மார்ச் 1 இல் வணிகமொன்றின் சில்லறைக்காசு மீதி ரூபா 630 ஆகும். அத்தினத்தில் ரூபா 1370 காசு மீள்நிரப்பப்பட்டது. மார்ச் மாதத்தின் சில்லறைச் செலவுகள் வருமாறு.

போக்குவரத்துக் கட்டணம் 400
உபசரனைச் செலவுகள் 300
அஞ்சற் செலவுகள் 250
எழுத்தாணி 500
பல்லினச் செலவுகள் 300

ஏப்ரல் மாதத்தின் வசக்கட்டு நிதியினை ரூபா 100 இனால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அ)மாரச்மாதமுடிவில் மீள்நிரப்பவேண்டிய காசு எவ்வளவு?
.....

ஆ)பிரதான காசாளர் வழங்கும் முற்பணத் தொகைக்குரிய இரட்டைப்பதிவு யாது?
.....

25. வானதி நிறுவனத்தின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியை கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களானவை அதிகரிக்குமா அல்லது குறைக்குமா அல்லது மாற்றமின்மையா என்பதனைக் குறிப்பிடுக.

கொடுக்கல்வாங்கல்

A : இரத்துச்செய்யப்பட்ட கொடுத்தக்கழிவு .....

B : மீளப்பெற்ற நட்டக்கடன் .....

C : கடன்பட்டோர் எதிரீடு .....

D : கடன்பட்டோர் மீது விதித்த வட்டி .....